**O.S.No. 232/2013**

**DW 4: சரஸ்வதி** தேதி 13.02.2026

பிவாசா 4 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1,2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்துகள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. அவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் சுய சம்பாத்திய சொத்து. எந்த கிராமத்தில் என்றால் திங்களூர் கிராமத்தில் உள்ளது. என் அப்பா 6.12.2014 ல் எனக்கு உயில் எழுதி வைத்தார். அந்த உயிலில் எவ்வளவு விஸ்தீரணம் எழுதி வைக்கப்பட்டது என்றால் 1.80 ஏக்கர். அடுத்த நாள் 7.12.2014 ல் தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் 1.20 ஏக்கர் எனக்கு எழுதி கொடுத்தார். மீதி சொத்துகளை என்ன செய்தார் என்றால் மொத்தம் 10 ஏக்கரில் எனக்கும் என் அக்காவிற்கு 5 ஏக்கரும் எழுதி கொடுத்தது போக மீதி 2 ஏக்கர் என் அப்பாவிற்கு இருந்தது. என் அப்பா எனக்கு எழுதி வைத்த உயில் சாசனத்தின் அசல் என்னிடம் உள்ளதா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா எனக்கு எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தையும் நான் தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி சொத்துகள் கறாராகி விட்டதா பொதுவில் உள்ளதா என்றால் பொதுவில் தான் உள்ளது கறாராகவில்லை. என் பெயரில் பட்டா உள்ளதா என்றால் பட்டா உள்ளது. கந்தாயம் கட்டி வருகிறேன். பட்டா மற்றும் கந்தாய ரசீதுகளை தாக்கல் செய்திருக்கிறேன். துரைசாமி, ஸ்ரீராம் இருவரும் எனக்கு தெரிந்தவர்களா என்றால் ஆமாம் உறவினர்கள் அல்ல. அதில் யாருக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் அவர்கள் இருவரும் என்னை அழைத்து சென்று ஏமாற்றி கையெழுத்து வாங்கி கொண்டார்கள். அவ்வாறு கையெழுத்து வாங்கியது எப்போது என்றால் 15 வருடத்திற்கு முன்பாக வாங்கி கொண்டார்கள். என் அப்பா 15 வருடத்திற்கு முன்பாக இறந்துவிட்டார். அவர்

இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. கோயிலுக்கு போனதாக சொல்லிவிட்டு சென்றார் திரும்ப வரவில்லை. அதனால் அவர் இறந்து விட்டாரா அல்லது உயிருடன் இருக்கிறாரா என்று தெரியவில்லை. அவர் இறந்தால் தான் உயில் படி சொத்தை கேட்க முடியும் என்றும் அவர் உயிருடன் இருந்தால் உயில் படி கேட்க முடியாது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. தேடிப்பார்த்தும் என் அப்பா கிடைக்கவில்லை.